# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
த.பெ.1559, பொது திறைசேரி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு 01 இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Planning and Economic Development, Colombo 01, Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| කාර්යාලය / அலுவலகம் / Office | දුරකථන / தொலைபேசி / Telephone | +94 11 2484600<br>+94 11 2484700 | |
| ෆැක්ස් / பெக்ஸ் / Fax | +94 11 2484970<br>+94 11 2320042 | වෙබ් අඩවිය / இணையதளம் / Website | www.treasury.gov.lk |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No. | TO/CFM/01/05/03 | ඔබේ අංකය / உமது இல / Your | | දිනය / திகதி / Date | 2025.11.19 |

**திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இலக்கம் 06/2020**

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்

**<u>2005 ஆம் நிதியாண்டின் இறுதியில் காசுப் புத்தகங்களை மூடுதல் மற்றும் பணி முற்பணக் கணக்குகளை மூடுதல்.</u>**

என்னால் வெளியிடப்பட்ட 2020.10.14 ஆம் திகதிய திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இல.06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகங்களை மூடுதல் மற்றும் பணி முற்பணக் கணக்குளை மூடுதல் ஆகியவற்றின்போது இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள் தினங்களுடன் இணங்கி அத்தினத்தில் அல்லது அதற்கு முன்பாக உரிய நடவடிக்கைகளை ஒழுங்கமைத்துக்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகிறேன்.

1. <u>2025 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காசுப் புத்தகத்தை மூடுதல்.</u>
   2025 ஆம் ஆண்டின் காசுப் புத்தகத்தை, 2025 டிசம்பர் 31 ஆம் திகதியின் இறுதியில் திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இல.06 இல் 1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக மூடுதல் வேண்டும்.

2. <u>2025 ஆம் ஆண்டிற்கான பணி முற்பணக் கணக்கை (7002) மூடுவதற்காக வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல். (வழிகாட்டல் இல. 06 இன் உப பிரிவு 2.1, 2.2 மற்றும் 2.3 ஆம் பந்தி)</u>

   உப அலுவலகங்கள் அற்ற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் 2025 டிசம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறு காசுப் புத்தகங்கள் மீதியைக் குறிப்பிட்டு TOD/IMP/06 ஆம் இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2026 ஜனவரி 01 ஆம் திகதி தங்களது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கைப் பேணி வருகின்ற வங்கிக் கிளைகளுக்கு ஒப்படைக்க வேண்டும்.

   பொதுத் திறைசேரிக்கு காசுப் புத்தகத்தின் மீதியை அனுப்புவதற்காக, உப அலுவலகங்களைக் கொண்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலயகங்கள் 2026 ஜனவரி 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் 2025 டிசம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறு காசுப் புத்தகங்கள் மீதியைக் குறிப்பிட்டு TOD/IMP/06 ஆம் இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து தங்களது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கை பேணி வருகின்ற வங்கிக் கிளைகளுக்கு ஒப்படைக்க வேண்டும். அதன் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றுடன், TOD/IMP/06 ஆம் இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தின் பிரதியையும் இந்தத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2025 ஆம் ஆண்டில் உப அலுவலகத்திற்கு மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல இடைக்கால பணி மற்றும் முற்பணங்களையும் 2025.12.31 ஆம் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் செலுத்தி அந்தக் காசு மீதிகளை 2026 ஜனவரி 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திறைசேரிக்கு அனுப்பக் கூடிய விதத்தில் தங்களினால் தேவையான முன்னேற்பாடுகள் செய்து கொள்ளப்படல் வேண்டும்.

3. <u>2025 ஆம் ஆண்டுக்கான மீள் நிரப்பல் செய்யக்கூடிய வெளிநாட்டு உதவி பணி முற்பணக் கணக்கை (7003) செலுத்துவதற்காக வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல். (வழிகாட்டல் இல. 06 இன் 3 ஆவது பந்தி)</u>
கருத்திட்ட அலுவலர்கள் மீள் நிரப்பல் செய்யப்படுகின்ற வெளிநாட்டு உதவிக்காக 7003 குறியீட்டு இலக்கத்தின் கீழ் கருத்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணி முற்பணங்களை 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்தகத்தின் மீதியை உறுதிப்படுத்தி மாதிரிப் படிவ இல.TOD/IMP/07 ஐ உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2026 ஜனவரி 05 ஆந் திகதியன்று கணக்கைப் பேணி வருகின்ற வங்கிக் கிளைக்கு ஒப்படைத்தல் வேண்டும். வங்கியிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கின்ற வரவு அறிவித்தலை சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றுடன் மாதிரிப் படிவ இல TOD/IMP/07 மற்றும் TOD/IMP/07(i) ஆகியவற்றை சரியாகப் பூர்த்தி செய்து தொடர்புடைய அமைச்சின் செயலாளருக்கு பிரதியொன்றைக் கொண்டதாக உடனடியாக இந்தத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

4. கணக்குகளைத் தீர்ப்பதற்கு சாத்தியமானது என கருதப்படும் நிலையிலேயே கொடுக்கப்பட்ட காலக்கெடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் 2025.12.31 அன்று காசுப் புத்தக நிலுவையை வைப்பிலிட முடிந்தால் அந்தந்த அமைச்சு /மாகாண சபை / திணைக்களம் / மாவட்டச் செயலகம் ஆகியவை 2026.01.05 வரை காத்திருக்காமல் நிலுவைகளை வைப்பிடவும். இது 2025 டிசம்பர் மாதத்திற்கான முதலாவது கணக்குச் சுருக்கத்தின் ஊடாக பொதுத் திறைசேரிக்கு பணிமுற்பணக் கணக்கு பதிவுகளை வெளியிடவும் ,2025.12.31 இல் தீர்க்கப்படாத கட்டுநிதி பணிமுற்பணக் கணக்கு மீதியைக் குறைக்கவும் உதவும்.

5. திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இல.06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்ந்தும் அவ்வாறே மாற்றமின்றி காணப்படும்.

6. இந்த வழிகாட்டல்கள் தொடர்பான மேலதிக விளக்கங்களை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திரு.எம்.ஏ.எஸ்.எச்.பெரேராவை (தொலைபேசி இலக்கம் 011-2484727) தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஜுட் நிலுக்ஷான்
பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை)